ஜெம்ஸ் சத்தம்

Since 1972

பிப்ரவரி 2019

இச்சையினால்
உலகத்திலுண்டான
கேட்டுக்குத் தப்பி,
திவ்விய சுபாவத்துக்குப்
பங்குள்ளவர்களாகும்
பொருட்டு,
மகா மேன்மையும்
அருமையுமான
வாக்குத்தத்தங்களும்
அவைகளினாலே நமக்கு
அளிக்கப்பட்டிருக்கிறது.
2 பேதுரு 1:4

செவிலியர் பள்ளி சான்றளிப்பு

ஜெம்ஸ் சத்தம்

Since 1972

GEMS Satham

Transforming Peoples to Transform Nations

அன்பின் மடல் - 2

சகோ.D.அகஸ்டின் ஜெபக்குமார்

கேள்வி - பதில் - 9

வாலிபர் கூடுகை - சிக்காரியா - 13

ஊழியர் உபவாசக் கூடுகை - 14

குடும்ப ஐக்கிய கூடுகை - 16

பணித்தளச் செய்திகள் - 18

முன்னேற்றப் பணி முகவரிகள் - 28

Published for

Gospel Echoing Missionary Society

11, 13th Cross Street, New colony
Chrompet, Chennai - 44
Ph. : 044-22386031, 044-22380295

Published by

GEMS Educational Media Services
14, Jeba Nagar, Vasanthapuram south,
Near Vijaya Garden, Tirunelveli 627005
Ph. : 9488771655
E-Mail : media@gemsbihar.org

Field office

GEMS, Sikaria, Indrapuri - 821308
Rohtas Dist., Bihar , Ph. : 06184 - 234567
(Railway station & courier centre : Dehri on Sone)
Website : www.gemsbihar.org
E-mail : gems@gemsbihar.org

'ஜெம்ஸ்' என்பது,

Gospel Echoing Missionary Society

விசுவாச இளைஞர்கள் சிலரால் 1972-ம் ஆண்டு நிறுவப்பட்டு, 1979-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஓர் ஊழியம்.

பீஹார் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் உள்ளோரைச் சந்திப்பதே இவ்வூழியத்தின் பிரதான தரிசனம். அத்துடன், ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் பணியினையும், திருச்சபைகளை ஸ்தாபிக்கும் பணிகளையும் தொடர்ந்து செய்துவருகின்றது. பீஹார், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் மஹாராஷ்டிரா மாநில மக்களுக்கு நற்செய்தியினை அறிவிப்பதுடன், அண்டை நாடுகளில் நடைபெறும் ஊழியங்களையும் ஊக்குவித்துவருகின்றது. ஆதிவாசி மக்களைச் சந்திப்பது, குழந்தைத் தொழிலாளர்கள், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோரை மறுவாழ்வு மையங்களில் ஆதரிப்பது, மருத்துவ சேவை அளிப்பது, கல்வியினால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்ற ஊழியங்களால் உன்னதரை உலகிற்கு அறிவித்துவரும் ஓர் மிஷனரி ஊழியம்.

அன்பின் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெபப் பங்காளரே,

நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? என்று தன் இதயத்தை வெளிப்படுத்துகிற தேவனுடைய நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன் (ஆதி. 18:18). கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார் (ஆமோஸ் 3:7) என்ற வசனத்தை உபயோகப்படுத்தி, அநேகர் இன்று தீர்க்கதரிசனங்களை ஆண்டின் துவக்கத்தில் உதிர்த்துவருகின்றனர்.

அநேகரின் தீர்க்கதரிசனங்கள் இன்டெர்நெட்டைச் சார்ந்திருக்கிறதையும், இயேசு சொல்லிவிட்டுச் சென்ற அடையாளங்களை முன்நிறுத்தி, இந்த நாட்களில் நடக்கப்போகிறது என்று **குத்துமதிப்பாகச்** சொல்லுவதையும், அகத்தியர் நாடி ஜோதிடன் பாபுவின் சொற்களை வேதவசனத்தோடு இணைத்துக் கூறுவதனையும், அவர்கள் சொல்லுகின்றவற்றிற்கே **முரண்பட்டதாக** இருக்கின்றதனையும், **நாஸ்டர்டாமின் புத்தகத்தைச்** சார்ந்திருப்பதனையும் காணமுடியும்.

செய்தித்தாள்களையும், ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், பத்திரிக்கைத் தலையங்களையும் ஒழுங்காகப் படிப்பவர்கள், இப்படிப்பட்ட தீர்க்கதரிசனங்கள் வரும் விதத்தினை அறிந்துகொள்வது எளிது.

போதாக்குறைக்கு, வாக்குத்தத்தங்களும் மலிந்துபோய்விட்டது. ஆண்டவர் வாக்குத்தத்தங்களைத் தருபவர் என்பது மறுக்கமுடியாதது; எனினும், "தம்முடைய மகிமையினாலும், காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய

திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, **இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு,** மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது (2 பேது 1:3,4) என்பதே உண்மை.

உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்ப வாழ்வுக்கு வழிநடத்தவேண்டிய வாக்குத்தத்தங்கள், திவ்விய சுபாவத்திற்கு நம்மை பங்குள்ளவர்களாக நெருக்கி ஏவும் வாக்குத்தத்தங்கள், **இன்றைய நாட்களில் வெறும் ஆசீர்வாதத்திற்கும் ஆறுதலுக்காகவும் அளிக்கப்படுகிறது.**

ஆபிரகாமுக்குத் தான் செய்யப்போகிறதை மறைக்காத ஆண்டவர், அவன் ஆசீர்வதிக்கப்படப்போவதனையும், உலகத்தில் உள்ள ஜாதிகள் அவனால் ஆசீர்வாதம் பெறப்போகிறதையும் மனதில் கொண்டவராய், அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின் தன் வீட்டாருக்கும் நீதி, நியாயத்தைச் செய்யவும் கர்த்தரின் வழியில் **நடக்கக் கட்டளையிடுவான்** என்கிற நம்பிக்கையிலேயே அவைகளைக் காண்பிக்கிறார். (ஆதி. 18:17-19)

சுத்திகரிப்புக்கு ஏதுவான வார்த்தைகளை தீர்க்கதரிசி சொல்லுவான் என்று அறிந்தே அவனுக்கு வெளிப்படுத்துகிறார். (ஆமோஸ் 7:11)

இப்படியிருக்க, இன்றைக்குத் தரப்படும் வாக்குத்தத்தங்கள் அநேகமாக நமக்கு இதமாகத் தோன்றுகிறவைகளாகவும், நாம் விரும்புகிறவைகளாகவுமே இருக்கிறது.

T.W.டாசர் என்கிற தேவ மனிதன், **இன்றைக்கு நம்முடைய தேவை தீர்க்கதரிசன பிரசங்கிகளே; ஏனெனில், தீர்க்கதரிசி என்பவன் காலத்தினை அறிந்து,** இந்த காலத்திற்கு தேவன் ஜனங்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறார் என்பதனைக் கூறுபவனே. (Today we need prophetic preaching. Prophet is the one who know His times and what **God is trying to Say** to the people of His times)

மக்களின் ஆவிக்குரிய நிலையினையும், மனநிலையையும் எடுத்துரைப்பது தீர்க்கதரிசனங்களின் தலையாயக் கடமை. இன்றைய பிரசங்க பீடங்களில் ஞானத்தைப்போதிக்கும் வசனமும், ஆவிகளைப் பகுத்தறிவிக்கும் வரமும் வெளிப்படுவதில்லை.

மேலும் அவர் கூறுகையில், நம்முடைய தேவை என்ன என்பதை சொல்லுபவனும், நம்முடைய நிலமையோடு கூட **உலகில் நடப்பவைகளை**

ஆவிக்குரிய கண்ணோட்டதில் காட்டிக்கொடுப்பவனே தீர்க்கன் என்கிறார்; எத்தனை உண்மை, அப்படிப்பட்டவைகளை நாடுவோமாக.

கூடவே, இது எழுப்புதலின் நாட்கள் என்றும் அதிகமாகச் சொல்லப்படுவதனைக் கேட்க நேரிடுகிறது. எழுப்புதலை அதிகமாக வாஞ்சிப்பவர்களில் நானும் ஒருவன்; எழுப்புதல் தேவ ஜனங்கள் மத்தியில் உண்டாவது; அதன் விளைவாக தேசம் சுவிசேஷ மயமாக்கப்படும் என்பது அப்பட்டமான உண்மை. **எழுப்புதலைத் தொடர்வது சுவிசேஷமயமாக்கப்படலே.**

எனவே நாம் அறிந்து கொள்ள வேண்டிய எழுப்புதல் என்பது **தேவ ஜனங்கள் மத்தியில்தான். எழுப்புதலுக்கு முன்னோடி தெளிவான மனந்திரும்புதலும், தேவ வசனத்துக்குக் கீழ்ப்படியத் தூண்டும் பரிசுத்த சிந்தையும், அழிந்துபோகிறவர்களைக் குறித்த ஆழ்ந்த கரிசனையுமாய் இருக்கிறது** என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எசேக்கியா ராஜா காலத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஏற்பட்ட எழுப்புதலில், **முதலாவது தலைவன் (இராஜா)** கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதைச் செய்ய தன்னை ஒப்புக்கொடுக்கிறான். இன்றைக்கும் தலைமைப் பொறுப்பில் இருக்கும் அனைவரும் அப்படிப்பட்ட ஒப்புக்கொடுத்தலுக்குத் தங்களைத் தரவேண்டும். (2 நாளா. 29:2)

தொடர்ந்து **பாவ அறிக்கை. அசுத்தங்களும் பொல்லாப்புகளும்** தேவ ஆலயத்தை நிரப்பிவிட்டதனைக் கண்டு ஏற்படும் **அங்கலாய்ப்பினால்** உண்டாவது அது (2 நாளா. 29:6,7). அதனைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்ட ஊழியர்களே அவைகளை **அகற்றி,** ஆலயத்தைச் சுத்தம் செய்ய ஏவப்படுவது அடுத்த படி (2 நாளா. 29:11)

ஆலய சுத்திகரிப்பும், அகற்றப்படவேண்டியவை அகற்றப்படல் தொடர்ந்து ஏற்பட்டு, **உடைந்து போன பகுதிகள் மீண்டும் சீர்படுத்தப்படவேண்டும்.** (2 நாளா. 29:18)

இதற்குபின்னர் பரிசுத்தத்தினால் உண்டாகும் பலி செலுத்துதலும், ஆராதனையும் (2 நாளா. 29:23-26). பின்னர் **தேசத்தில் சுத்திகரிப்பு. முதலாவது தேவ ஆலயத்தில் ஆரம்பித்தது, இப்போது தேசத்தில்** ஜனங்கள் மத்தியில் செய்யப்படுகிறது. (2 நாளா. 30:9)

அனைத்திலும் காணப்படுவது **மனத்தாழ்மை** (2 நாளா. 30:11) அதற்கு பின்னர் **விண்ணப்ப ஜெபம்** ஏறெடுக்கப்படுகிறது (2 நாளா.

30:20) அதைத் தொடர்ந்து உண்டாகும் **இடைவிடா ஆராதனைப் பாடல்கள்**. தலைவனுக்கும் ஜனத்துக்கும் இடையே **நல் உறவு, நிலைநாட்டப்படுகிறது** (2 நாளா. 30:22-27). **மகிழ்ச்சியின் சத்தம்** தேசத்தை நிரப்புகிறது.

உடைக்கப்பட்டு அகற்றப்படவேண்டியவைகளில் மோசே உண்டாக்கிய வெண்கல சர்ப்பமும் அடங்கும். ஏனெனில் அது பின்னர் ஆராதனைப்பொருளாக மாறிவிட்டதினாலேயே. (2 இரா. 18:4)

இதனைத் தொடர்ந்து எதிரிகளாய் இருந்த பெலிஸ்தர்களையும் அவர்கள் அதிகாரத்தையும் தள்ளிவிட்டதினால் உண்டான **வெற்றிகள்** (2 இரா. 18:7-9). **எந்த அந்நிய சக்தியும் நம்மை ஆளவிடக்கூடாது என்பதில் அத்தனை கவனம்**.

இன்றைக்கும் அது முற்றிலும் பொருந்தும். இடுக்கண்கள் வந்தபோது **தேவ தீர்க்கர்களையும், தேவ சமுகத்தையுமே நாடி ஓடுகிறான்** எசேக்கியா ராஜா (2 இரா. 19:2-4,14-20). தேவன் தேசத்தில் கிரியை செய்யவும், இதுவரை நடந்திராத விதமாக தேவனே யுத்தத்தில் இறங்கி கிரியை செய்வதனையும் ஜனங்கள் கண்கூடாகக் கண்டார்கள். (ஏசா. 37:36)

இதனைத்தான் உசியாவின் காலத்திலும், யோசபாத்தின் காலத்திலும், யோசியாவின் காலத்திலும் காணலாம். **இந்த முறையில் மாற்றம் இல்லை என்றே நான் நம்புகிறேன்**.

இந்த சுத்திகரிப்பின் நிமித்தம் உண்டான எழுப்புதலினால், ஜனங்கள் **கர்த்தருக்குக் கொடுக்கும் காரியத்திலும் உற்சாகம் காட்டினார்கள்** (2 நாளா. 31:5). அதற்கு முன்னுதாரணமாக **தானே கொடுத்தான்**. "தன் ஆஸ்தியிலிருந்து தெரிந்தெடுத்து தன் பங்கைக் கொடுத்தான். (2 நாளா. 31:3)

ஜனங்களை காணிக்கைக்கு ஏவும் தலைவர்கள் பலர், தங்கள் பங்கைச் செலுத்தியிருக்கிறார்களா? என்றால் சந்தேகமே. **ஜனங்கள் கொடுத்ததில் உல்லாசமாக வாழக் கற்றுக்கொண்டார்கள் என்றே கூறுவேன். ஏழைகளின் காணிக்கைகளில், தங்களின் வாழ்க்கைத் தரத்தை ஜனங்களோடு அடையாளம் காட்டக்கூடா வண்ணம் உயர்த்திகொண்டவரின் எண்ணிக்கையே இன்று சபைகளில் மிகுதி**.

தலைவனின் தியாகத்தைக் கண்ட ஜனங்களும் கொடுக்க கற்றுக் கொண்டார்கள். அதின் நிமித்தம் அவர்கள் மேலும் **ஆசிர்வாதம்** வந்தது.

"இந்தக் காணிக்கையைக் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டுவரத் தொடங்கினதுமுதல் நாங்கள் சாப்பிட்டுத் திர்ப்தியடைந்தோம்;

இன்னும் மிச்சமும் இருக்கிறது; கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆசீர்வதித்ததினால் இந்தத் திரட்சியான அம்பாரம் மீந்திருக்கிறது (2 நாளா. 31:10). காணிக்கை பராமரிப்பு வேலைக்காக, உண்மையுள்ள மனிதர்கள் நியமிக்கப்படுகிறார்கள் (2 நாளா. 32:15). ஆனால் **இன்றோ காவலர்களே காணிக்கையைக் காணமற்போகப்பண்ணும் அவலநிலை**.

தேசத்தின் நன்மைக்காகவும் ராஜா (தலைவன்) செயல்படுகிறார் கீயோன் என்றும் ஆற்றிலே **அணைகட்டி அதின் தண்ணீரை மேற்கேயிருந்து தாழத் தாவீதின் நகரத்திற்கு நேராகத் திருப்புகிறான்**. எசேக்கியா செய்ததெல்லாம் வாய்த்தது (2 நாளா. 32:30). நமக்குக் கிடைக்கும் பாடம் என்ன?

தண்ணீரை, **தேவையுள்ள இடத்திற்கு நேராகத் திருப்பும் முயற்சி அது. இன்றும் இந்திய தேசத்தில் தேவனை அறியாத கோடி கோடி** ஜனங்கள் உண்டு; அவர்களும் ஜீவத்தண்ணீரைக் குடிக்கத்தக்கதாக அணைகள் கட்டப்பட்டு (ஊழியங்கள்) அவர்களுக்கு நேராகத் திருப்பப்படவேண்டும் அல்லவா; அது தானே மெய்யான எழுப்புதலின் இறுதி முடிவாக மாற முடியும். உண்மை எழுப்புதல் ஜனங்களை சந்திக்கப்படாதவர்கள் சந்திக்கப்பட ஏவி எழுப்புவதோடு திசை திருப்பிவிடும். திருப்தியான வாழ்வு மற்றவருக்கு திருப்தியாக மாறும்.

1978ம் ஆண்டில் நான் தனியாக சைக்கிளில் முழு மாவட்டத்திலும் ஒரு ஆலயமோ, ஆராதிக்க மக்களோ இல்லாத நாட்களில், கிராமம் கிராமமாக பிரயாணம் செய்துகொண்டிருந்த போது, என் வாயில் தேவன் போட்ட வார்த்தைகளைத் தான் பாடலாக்கினேன். (இது GEMS -ன் தரிசனப் பாடல்கள் இசைத்தட்டில் உண்டு)

கடைசி நாட்களிலே
கடாட்சிக்கும் தேவன் அவர்
மாமிசமானவர் யாவரின் மேலும்
மாரியைப் பொழிவேன் என்றார் - பின்

பெருமழையின் இரைச்சல்
பெருந்தொனியாய் முழங்க
பெருகிடும் கிருபை அறுவடைக்கென்றே
அருள்மாரி பொழியும் என்றார் - இன்று

தரிசனம் கண்டிடுவார்
கரிசனை உள்ளோரெல்லாம்
பரிசுத்தவான்கள் கூடி மகிழ்வார்
மாரிதனைக் கண்டிட - பின்

முழங்காலில் நின்றோ ரெல்லாம்
முழங்கிடுவார் அன்று
முழந்தாள்கள் மடக்கும் இயேசுவின் நாமம்
தளங்களை நிரப்பிவிடும் - பணித்

இந்தியாவின் மண்ணிலே
சிந்திய கண்ணீரெல்லாம்
பந்தி பந்தியாய் திருப்பணிக்கென்றே
தந்தோரை எழுப்பிவிடும் - தம்மைத்

எழுப்புதல் வாஞ்சிக்கும் நம்மை இப்படிப்பட்டக் காரியங்கள் பற்றிப் பிடிக்கட்டும். **40 ஆண்டுகள் ஆகிவிட்டது**. அதனுடைய காரியங்களில் சில துளிகளாக அங்கும் இங்கும் காண்கிறேன்; ஆனால் திருப்தி ஏற்படவில்லை. ஊழியங்களும் தேவ பிள்ளைகளும் அலை அலையாய் எழும்பி, ஆங்காங்கே சுவிசேஷத்தைப் பறைசாற்றி, நற்கிரியைகள் செய்து, பிதாவின் நாமத்தை மகிமைப்படுத்தினால் தான் அதனை எழுப்புதல் என்பேன். **ஏங்குகிறது உள்ளம், வாடுகிறது இன்றைய நிலைமைகளைக் கண்டு, துடிக்கிறது இதயம், புலம்புகிறது உதடுகள். பெருகுகிறது கண்ணீர் என்று நடக்குமோவென்று.**

சென்னையில் நல்ல பெந்தேகோஸ்தே தலைமையின் கீழ் செயல்படும் ஓர் சபை, 120 கோடிக்கு ஒர ஆலயத்தை கட்ட அஸ்திபாரம் போட்டாரா்கள். (The Strengh of the church is not according to the seating capacity but according to all the sending Capacity). 12,000 பேர் உட்கார்ந்து ஆராதிக்க வசதியாகக் கட்டப்பட உள்ளது என்று போதகர் அறிவித்தார். அந்த சபையின் ஊழியர்களை மதிக்கிறவன் நான்; ஆனால், ஒரு சபையின் பலம், அதிலிருந்து எத்தனை பேர் தேசம் சந்திக்கப்பட எழுப்பப்பட்டு அனுப்பப்பட்டார்கள் என்பதனை ஆழமாக விசுவாசிக்கும் எனக்கு, இதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஏன் ஒரே இடத்தில் கூடி ஆராதிக்க வேண்டும்? அது பாபேலையே உருவாக்கும் சென்னையிலேயே 60 சபைகள் கட்டப்பட்டிருக்கலாமே!

புதிய ஏற்பாட்டுக் காலச் சபையின் தாற்பரியத்தினை பறிகொடுத்துவிட்டோம் நாம். இயேசு இதோ சீக்கிரம் வரப்போகிறார் என்றுதானே முழங்குகிறோம். அப்படியென்றால் இத்தனை (120 கோடி இதில் நிலத்தின் விலை அடக்கம் இல்லை) செலவில் ஏன் சபைக் கட்டிடம்? அவர்கள் பங்குவகிக்கும் ஸ்தாபனத்தின் தலைமை சபையின் **தெருச்சண்டைக்குக்** காரணம் பெரிய கட்டிடம் தானே!

என் ஜனங்கள் அறிவில்லாமல் (சத்தியத்தினை கரைத்துக் குடித்தவர்கள்) தேசத்தினைக் குறித்த அக்கறையற்று இருக்கிறார்களே! நெஞ்சம் பொறுக்கவில்லையே. ஜெபிப்போம், கதறுவோம், கண்ணீரால் அவர் பாதம் நனைப்போம். தேசம் தேவனை அறிந்திட நித்தமும் உழைப்போம்.

வாக்குத்தத்தங்களும் தீர்க்கதரிசனங்களும் சுவரை அலங்கரிக்க
வார்த்தையாய் வெளிப்பட்ட இயேசுவை உலகுக்கு
வாரிவழங்கிட ஏவுவது இல்லை ஏனோ !

எழுப்புதலின் வாஞ்சையும் எழுப்புதலின் வாசனையும்
ஏழுமடங்கு நெருப்பில் நடந்தவரைக் காண்பிக்க
எழுந்து செல்லாமல் செய்துவிட காரணம் என்னவோ !

தேவ ஜனங்களும், தலைவர்களும் அனுபவித்த
தேவ அறிவும் முறைகளும் இன்றும் செயலாற்ற
தேடுவோர் கோட்டை விட்டதென்ன?

காலமும் செல்லுதே ஆதவனும் மறையுதே
காலம் கடந்திடும் முன்னர் கருத்துக்கொண்டோராய்
கால்கள் விரைய மறுப்பதும் ஏனோ !

முழங்கால் முடங்கிட்டால் தாழ்மை வெளிப்படுமே
முழக்கங்கள் திக்கெட்டும் இரட்சிப்பை சொல்லிடுமே
முடங்கிடாமல் முன் செல்லுவோம் முற்றும் ஜெயம் நமக்கே !

அன்பரின் அறுவடை பணியில்
அன்பு சகோதரர் D. அகஸ்டின் ஜெபக்குமார்

கேள்வி – பதில்

"தேவனுடைய சாயல் மற்றும் தேவனுடைய ரூபம்"

என்பதின் அர்த்தம் என்ன?

சகோ. கிறிஸ்டோபர் - GEMS Training Coordinator

அநேகர் குழம்புகிற மற்றும் குழப்புகிற ஒரு மிக முக்கியமான சத்தியம் இது. இந்த கேள்விக்கான பதிலை சரியாக அறிந்துகொண்டால், கிறிஸ்தவ வாழ்க்கையில் நமக்கு வரும் அநேக சந்தேகங்களுக்கு, குழப்பங்களுக்கு பதில் கிடைத்துவிடும்.

ஆதியாகமம் *1:26 – 27* சொல்லுகிறது: **"பின்பு தேவன்: நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக.... (வச. 26); தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார்."**

இந்த வசனத்தைப் படித்துவிட்டு, ஆதியாகமம் 2:7 – ம் வசனத்தையும் படித்துப்பாருங்கள், நீங்கள் குழம்பிப்போவீர்கள்.

"**தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவ ஆத்துமாவானான்**." (2:7)

ஆதியாகமம் *1:26 – 27* – லிலேயே மனிதனை தேவன் உண்டாக்கிவிட்டாரே. பின்பு 2 – ம் அதிகாரத்தில் இன்னொரு முறை தேவன் மனிதனை உண்டாக்கினாரா? என்பது அநேகருடைய கேள்வி. இதை நாம் மேலோட்டமாகப் பார்த்தால் குழப்பமும், சந்தேகமும்தான் மிஞ்சும். கொஞ்சம் ஆழமாக தியானித்துப் பார்த்தால், இதிலுள்ள இரகசியங்கள் நம்முடைய விசுவாசத்தை மிகவும் வலுப்படுத்துவதாக இருக்கும்.

ஆதி. *1:26,27* – ஐயும், *2:7* – ஐயும் திரும்பத் திரும்ப வாசியுங்கள். அதில் இருவேறு வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருப்பதை நீங்கள் காணமுடியும். முதல் அதிகாரத்தில் "**சிருஷ்டித்தார்**" என்ற வார்த்தை மூன்று முறை வருகிறதை கவனியுங்கள். *2:7* – ல் "**உருவாக்கினார்**" என வருவதை

கவனியுங்கள். இதை நீங்கள் ஆங்கிலத்தில் வாசித்தால், முதல் அதிகாரத்தில் “created” என்றும் இரண்டாம் அதிகாரத்தில் “formed / made” என்றும் வருவதை நீங்கள் பார்க்கலாம்.

- Created என்பது இல்லாத ஒன்று சிருஷ்டிக்கப்பட்டது (the invisible part of man - soul and spirit)
- formed / made என்பது இருக்கிற ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுவடிவில் உருவாக்குவது (the visible part of man - the physical body)

ஆக, முதலாம் அதிகாரத்தில் மனிதனுக்குள் மறைந்திருக்கும் காணக்கூடாத பகுதிகளை தனக்குள் இருந்து உண்டாக்குகிறது. அதாவது, மனிதனுடைய ஆத்துமா மற்றும் ஆவி. இரண்டாம் அதிகாரத்தில் தேவன் மனிதனுடைய சீரத்தை உண்டாக்குகிறார். ஏற்கனவே அவர் படைத்திருந்த பூமியின் மண்ணை எடுத்து அதிலிருந்து மனிதனுடைய காண்கின்ற பகுதியாகிய சீரத்தை வடிவமைக்கிறார். சீரத்தைப் படைத்த பின்பு “**ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்; அவன் ஜீவ ஆத்துமாவானான்**” என்று எழுதப்பட்டிருக்கிறது. “ஜீவ ஆத்துமாவானான்” என்றால், ஜீவனையும் (ஆவியையும்), ஆன்மாவையும் உடைய மனிதனாக அவன் உருவானான்.

இந்த ஆவியிலும், ஆத்துமாவிலும்தான் தேவனுடைய சாயல் இருக்கிறது. மனிதனுடைய சீரத்தில் தேவனுடைய சாயல் இல்லை. ஏனென்றால், அது காண்கின்ற ஒன்று; தேவன் காணக்கூடாதவர் (1தீமோ. 6:16; யோவா. 1:18; யோவா. 4:12; எபி. 11:27). தேவன் ஆவியாயிருக்கிறார் (யோவா. 4:24). “ஆவியான தேவனுக்கு ரூபம் ஒன்றுமில்லையே... ரூபமில்லை ஆகையால் சொரூபம் ஒன்றுமில்லையே...” என்ற பாடல் உங்களுக்கு நினைவிருக்கும் என்று நம்புகிறேன். மனிதர்களாகிய நமக்கு உருவம் இருக்கிறது; தேவனுக்கு உருவம் இல்லை. அவரை ஒரு சிலையில் வடிக்க முடியாது; ஒரு படத்தில் வரைய முடியாது; அவருக்கு உருவத்தைக் கொடுக்க முடியாது. ஆனால், இன்றைக்கு அறிவிலியான மனிதர்கள், தங்கள் விருப்பத்திற்கேற்ப கடவுளுக்கு உருவங்களைக் கொடுத்து அதை வணங்கிக்கொண்டிருக்கிற கொடுமை இந்தியாவில் நடப்பதுபோல வேறெங்கும் காணமுடியாது. இதைக் குறித்து ரோமர் 1:19 — 23 — ல் தெளிவாக வாசிக்கலாம்.

காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகளை, அழிவற்ற தேவனுடைய மகிமையை, அழிவுள்ள

மனுஷர்கள், மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு (உருவங்களுக்கு) ஒப்பாக மாற்றிவிட்டார்கள். வசனம் 25 சொல்லுகிறது: "**தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியைத் தொழுது சேவிக்கிறார்கள்." எனவேதான் தேவன், "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்**" என்று கட்டளையிடுகிறதையும், அப்படி செய்தால், "அவர் எரிச்சலுள்ள தேவனாக இருப்பார்" என்று எச்சரிப்பு கொடுக்கிறதையும் நாம் வேதத்திலே பார்க்கிறோம்.

காணாத உலகில் வாழும் உருவமில்லாத தேவன், முதலாவது மனிதனுடைய காணக்கூடாத பகுதிகளாகிய ஆத்துமாவையும், ஆவியையும் சிருஷ்டித்துவைத்துவிட்டு, இரண்டாம் அதிகாரத்தில் மனித சரீரத்தைப் படைத்து அதில் உட்செலுத்துகிறதை நாம் அறிகிறோம் — "நாசியிலே ஊதினார்" (ஆதி. 2:7). இப்பொழுது மனிதனுடைய காணக்கூடாத பகுதியும், காணக்கூடிய பகுதியும் இணைந்து, முழு சரீர மனிதனாக எழும்பி நிற்கிறதைப் பார்க்கிறோம். சரீரம் மண்ணினாலானது; ஆத்துமாவும், ஆவியும் தேவனிடமிருந்து இந்த சரீரத்துக்குள் புகுத்தப்பட்டது.

சரி, இப்பொழுது காணாத தேவதனின் சாயல் மற்றும் ரூபம் என்ன என்பதைப் பார்ப்போம். இதற்கான ஆங்கிலப் பதத்தைக் கவனியுங்கள் — image and likeness. இந்த இரு பதங்களும் வெவ்வேறு அர்த்தத்தைக் குறிக்கிறதாக இருந்தாலும், ஒரே விஷயத்தை மையமாகக் கொண்டவையாகும். அதுதான் தேவனுடைய "**திரித்துவம்**." ("திரித்துவம்" என்று சொன்னவுடன் நிறைய கேள்விகள் உங்கள் மனதில் எழும்பும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை). இந்தத் திரித்துவத்தை அடிப்படையாகக் கொண்டுதான் தேவனுடைய சாயல் மற்றும் ரூபம் என்னவென்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். (இங்கே திரித்துவம் என்றால் என்ன என்பதை விளக்க எனக்கு நேரமில்லை; மன்னிக்கவும்).

தேவன் திரித்துவமாய் இருக்கிறார் — "பிதா, குமாரன், பரிசுத்த ஆவி." அதுபோலத்தான் தேவன் மனிதனையும் மூன்று பகுதிகளை உள்ளடக்கியவனாகப் படைத்திருக்கிறார். — ஆவி, ஆத்துமா, சரீரம்.

(இதைக் குறித்து அடுத்த கேள்விக்கான பதிலில் பார்ப்போம்). இந்த ஆவி மற்றும் ஆத்துமாவுக்குள்தான் தேவன் தன்னுடைய சாயலை வைத்திருக்கிறார். அதாவது தேவனுடைய குணாதிசயங்கள். தம்முடைய குணாதிசயங்களை, அதாவது தனக்குள் இருக்கும் இயல்புகளை, பண்புகளை, குணநலன்களை தேவன் மனிதனுக்குள்ளும் வைத்திருக்கிறார். (நூறு சதவீதம் வைத்து படைத்தார் என்று சொல்ல முடியாது; ஆனால், அவருடைய குணங்கள் நிறைந்தவனாகத்தான் தேவன் அவனைப் படைத்தார்). அவை எவை என்பதைப் பாருங்கள்.

- தேவன் ஆளுகை செய்கிறவர்; மனிதனுக்கு ஆண்டுகொள்ளுகிற ஆற்றலைக் கொடுத்தார் (dominion / rule over the creation).
- தேவன் அதிகாரமுள்ளவர்; மனிதனுக்கும் அதிகாரத்தைக் கொடுத்தார் (authority).
- தேவன் படைக்கும் ஆற்றல் கொண்டவர்; மனிதனும் புதிது புதிதாக எதையாவது படைக்கவேண்டுமென ஆவலுடையவன் (creativity).
- தேவன் சுயமாக செயல்படுகிறவர்; அதேபோல மனிதனையும் தன்னிச்சையாக செயல்படுகிறவனாகப் படைத்தார் (free being).
- தேவன் தெரிந்தெடுக்கும் ஆற்றல் கொண்டவர்; மனிதனுக்கும் அதைக் கொடுத்திருந்தார் (ability to choose).
- திரித்துவத் தேவனுக்குள் உறவுப் பரிமாற்றம் இருந்தது; அதேபோல மனிதனும் உறவுகளைப் போற்றி வாழ விரும்புகிறான் (relationship).
- திரித்துவத் தேவனுக்குள் மொழிப்பரிமாற்றம் இருந்தது; அதேபோல மனிதனுக்கும் இருப்பதை நாம் அறிகிறோம் (communication).
- திரித்துவத் தேவனுக்குள் அன்புப் பரிமாற்றம் இருந்தது; அதேபோல மனிதனும் மற்றவருடைய அன்பை எதிர்பார்த்தும், அன்பு செலுத்தியும் வாழ்கிறான் (love).
- தேவன் தாம் படைத்தவைகளை கவனித்துக்கொள்ளுகிறவர்; அதேபோல மனிதன் கவனித்துக்கொள்ளும் குணமுடையவன் (care taker).
- தேவன் தம் படைப்புகளைப் பார்த்து ரசிக்கிறவர்; அந்த ரசிக்கும் இயல்பு மனிதனுக்கும் உண்டு. (ஆதி. *1:31; 2:23*)

தனக்குள் இல்லாத ஒன்றை தேவன் மனிதனுக்குள் வைக்கவில்லை. அதே சமயத்தில், தனக்குள் இருந்த எல்லா ஆற்றலையும், குணாதிசயங்களையும்

தேவன் மனிதனுக்குள் வைத்துவிட்டார் என்றும் நினைத்துவிடக்கூடாது. ஏதோ, வரம் கொடுத்தவன் தலையில் கை வைக்கிற முட்டாள்தனம் எங்கோ நடந்த கட்டுக்கதை; அது இங்கே நடக்கவில்லை. கற்றுக்கொடுத்தவனிடமே வித்தையைக் காட்டும் கதை இங்கே செல்லாது.

தேவனுடைய பல அம்சங்களுடன் படைக்கப்பட்டவன்தான் மனிதன். குரங்கிலிருந்து வந்தவன் மனிதன் என்று வாய்கிழிய சொல்லிக்கொண்டு திரியும் ஒரு வானரக்கூட்டம் இந்த வையகத்தில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறது. சாத்தானால் குருடாக்கப்பட்ட இவர்களின் மனக்கண்கள் திறக்கப்படுவது எப்போது? (2 கொரி. 4:4)

தேவனுடைய ரூபம் என்பது அவருடைய திரித்துவம்; அது மனிதனுக்குள்ளும் வைக்கப்பட்டுள்ளது. தேவனுடைய சாயல் என்பது அந்தத் திரித்துவ தேவனுக்குள் இருக்கும் குணாதிசயங்கள். அவைகளை தேவன் மனிதனுக்குள் வைத்துதான் மனிதனைப் படைத்திருக்கிறார். எத்தனை அற்புதமான தேவனை நாம் இவ்வளவு சமீபமாகப் பெற்றிருக்கிறோம். (உபா. 4:7; யாத். 15:11)

2018 உபவாசக் கூடுகை
டிசம்பர் 27,28,29

IN HIS FULLNESS

IN HIS FULLNESS

IN HIS FULLNESS

புதுவருட ஐக்கிய கூடுகை 2019

ஊழியர் உபவாசக் கூடுகை

2018 –ம் ஆண்டின் ஜெம்ஸ் ஊழியர் உபவாசக் கூடுகை, டிசம்பர் 27, 28, 29 ஆகிய மூன்று நாட்கள் சிக்காரியா ஜெம்ஸ் ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது. **"அவருடைய பரிபூரணத்தில்" (in His fullness)** என்ற கருப்பொருளினை மையமாகக் கொண்டு நடைபெற்ற இக்கூடுகையில், பல்வேறு பணித்தளங்களிலிருந்து வருகைதந்திருந்த ஜெம்ஸ் ஊழியர்கள் குடும்பமாகப் பங்கேற்றனர். தேவசமுகத்தில் அமர்ந்து வேதவசனத்தை தியானிக்கவும், நிகழ்கால மற்றும் வருங்கால ஊழியத்திற்காக பாரத்துடன் இணைந்து ஜெபிக்கவும், தேசத்தில் எழும்பிநிற்கும் சவால்களைச் சந்திக்க தங்களை ஆயத்தமாக்கிக்கொள்ளவும் கர்த்தர் கிருபை செய்தார். ஒவ்வொரு நாள் காலை தியானக் கூடுகையின்போது, சகோ. அகஸ்டின் ஜெபக்குமார் கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்துகொண்டார். மேலும், இக்கூடுகையின் சிறப்புச் செய்தியாளராக அழைக்கப்பட்டிருந்த சகோ. J.N. மனோகரன் மூன்று நாட்களிலும் "அவருடைய பரிபூரணத்தில்" என்ற கருப்பொருளின் அடிப்படையில் செய்தியைப் பகிர்ந்துகொண்டார். ஊழியர்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை தேவ சமுகத்தில் ஆராய்ந்து பார்க்கவும், ஆழமான அர்ப்பணிப்பிற்குள் இன்னும் கடந்துவரவும், ஆத்தும ஆதாயப் பணிக்காக ஆர்வமுடன் மேலும் தங்களை அர்ப்பணித்துக்கொள்ளவும் இக்கூடுகை வழிவகுத்தது. ஒவ்வொரு பகுதியின் நிறைவிலும், ஊழியர்கள் பல்வேறு குழுக்களாக அமர்ந்து, கேட்ட செய்திகளின் சாராம்சங்களை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்துகொண்டது, சத்தியத்தின் சத்தத்தை மேலும் ஊழியர்களின் உள்ளங்களில் எதிரொலிக்கச் செய்தது. வாலிபர்கள் மற்றும் சிறுவர்களுக்காகவும் விசேஷித்த கூடுகைகள் நடத்தப்பட்டன.

தொடர்ந்து, 2019 ஜனவரி 1 அன்று சிக்காரியா பணித்தளத்தில் நடைபெற்ற ஊழியர்களுக்கான புதுவருட குடும்ப ஐக்கிய கூடுகை ஆசீர்வாதமாக அமைந்தது. ஊழியர்கள் தாங்களே இயற்றிய பாடல்களைப் பாடி தங்கள் தாலந்துகளை வெளிப்படுத்தினர். அன்பினை வெளிப்படுத்தும் பல்வேறு குறுநாடகங்களை நடித்தும் ஆண்டவருக்கு மகிமை சேர்த்தனர். வேதவினாப் போட்டிகளும் நடத்தப்பட்டு, வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. சிறுவர்கள், வாலிபர்கள் மற்றும் முதியவர்கள் என அனைவருக்கும் அந்நாள் ஆனந்தமான வேளையானது.

பணித்தளச் செய்திகள்

PEACE I கோட்டம்

பிப்ரவரி 01 ஹல்திகோச்

கோலே கிராமத்தில் சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடு வாயிலாக அநேகர் கிறிஸ்துவை அறிந்துகொண்டனர். பகுகா, சத்பஹியா, கபியா ஆகிய கிராமங்களில் ஜெபக் கூடுகை தடையின்றி சிறப்பாக நடைபெற்றதோடு, அநேகர் கலந்துகொண்டு தேவனைத் துதித்தனர். குந்தக் கிராமத்தில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது இதில் 30 பேர் கலந்துகொண்டதற்காக துதியுங்கள். ஜெபத்தின் வாயிலாக சுகம்பெற்ற மக்கள் சபைக்கு வரவும் புதிய கிராமங்களில் ஜெபக்குழு ஆரம்பிக்கப்படவும், புதிதாக சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டவர்கள் சபையின் அங்கத்தினர்களாக மாறவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 02 பெத்லா

பெத்லா, பர்வாடிஹ், கச்சன்பூர், கெக்கி, ரெஜினியா, கஸ்துர்வா, கேட், ரங்பனியா, கேச்கி, கஞ்சன்பூர், கோல்புர்வா ஆகிய 11 கிராமங்களில் வாராந்திர கூடுகை தவறாமல் நடைபெற்றது. தனிநபர் ஊழியத்தின் வாயிலாக 4 பேர் தொடப்பட்டனர். பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக 55 பேர் இயேசு கிறிஸ்துவை புதிதாக அறிந்துகொண்டதற்காக துதியுங்கள். புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள பெத்லா கிராமத்தைச் சேர்ந்த கீதாவின் வாழ்வில் தேவன் அற்புத சுகத்தை கட்டளையிடவும் மற்றும் சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் இயேசுவின் பக்கம் திரும்பவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 03 சர்ஹி

பாதாகோச்சா, கசியாடிஹ், சனோரா, லால்பக்லா, ஷ்யாம்பட்டி ஆகிய கிராமங்களில் செய்யப்பட்ட பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக வசனத்திற்கு வாஞ்சை காட்டினவர்களுக்கு 100 சுவிசேஷப் புத்தகங்கள், 8 புதியஏற்பாடு,

2 முழு வேதாகமம் விநியோகிக்கப்பட்டன. தொடர் ஊழியத்தின் வாயிலாக 5 பேர் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வந்துள்ளனர். திருவசனத்திற்கு கீழ்படிந்து உமேஷ்முன்டா, பூனம், பேத்மதி ஆகியோர் திருமுழுக்குப்பெற அர்பணித்துள்ளனர் துதியுங்கள். சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்ட 200 பேரும் கிறிஸ்துவின் அன்பைப் புரிந்துகொள்ளவும், மீனாதேவி அசுத்த ஆவியின் கட்டிலிருந்தும், யசோதா சுவாசப் பிரச்னையிலிருந்தும் விடுதலையாகவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 04 பன்சாரி

இப்பணித்தளத்தில் மூன்று நாட்கள் நடத்தப்பட்ட உபவாசக் கூடுகையில் 400 விசுவாசிகள் கலந்து கொண்டனர். பாலி கிராமத்தில் இரண்டு நாட்கள் செய்யப்பட்ட ஊழியத்தின் வாயிலாக பலர் கிறிஸ்துவை அறிந்தனர். பாலி, ஜமிரா, கன்டா, தெத்தர்டாத், செராங்கட், பன்சரி, சென்ஹா, மகுவாடோலி, நாத்பூர் ஆகிய 9 இடங்களில் பின்தொடர் ஊழியம் நிறைவேற்றப்பட்டது. பிரதிமாவை நாய் தாக்கியபோதிலும் காயமின்றி தேவன் பாதுகாத்தார். மீனா, சுலைமான். சங்கீதா ஆகியோர் கடும் காய்ச்சலிலிருந்து சுகமானார்கள். துதியுங்கள்! ஆறு மாதங்களாக சுகவீனமாக உள்ள 14 வயதுடைய ரோஷன் என்ற சகோதரன் விரைவில் பூரண சுகமாகவும், பணவசதியில்லாமையால் தனது பி.ஏ. படிப்பை பாதியில் நிறுத்தியுள்ள ஆஷா டோப்போவின் படிப்பின் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 05 பலுமட்

ஜோத்ரா, மன்டேர்டோலா, குச்வாடாட், மங்ரோகியா ஆகிய கிராமங்களில் செய்யப்பட்ட பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக 5 பேர் விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளனர். ஜோகியாடிஹ், பிப்ராஹி ஆகிய இடங்களில் நற்செய்திக்குழு சிறப்பாக செயல்படுகிறது. விசுவாசி சுதனிதேவியின் அடக்க ஆராதனை ஜோத்ரா கிராமத்தில் எவ்வித எதிர்ப்புமின்றி நடைபெற்றது. சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட இடங்களிலிருந்து புதிதாக மக்கள் கிறிஸ்துவுக்குள் வந்து கொண்டிருக்கின்றமைக்காக துதியுங்கள். விசுவாசிகளுக்கு விரோதமாக எழும்பும் கிராம மக்களின் மனந்திரும்புதலுக்காக, இப்பணித்தள ஆலய கட்டுமானப்பணி விரைவில் முடிவடையவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 06 பர்காகானா

விஷ்னுகட், பஜ்ரா, கதையா ஆகிய கிராமங்களில் திரைக்காட்சி ஊழியத்தின் வாயிலாக சுமார் 170 பேர் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டனர். சுவிசேஷம்

அறிவிக்கப்பட்டுவந்த கதைஹா, குசும்பா, கேரேடாரி, பஜ்ரா, டன்டுவா, விஷ்னுகட், பர்வாடிஹ், சிக்ரி, பான்டு, கரி ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. இரண்டு பேர் இயேசுவின் அன்பை அறிந்துகொண்டு சபையின் அங்கத்தினராக இணைந்தமைக்காக துதியுங்கள். கோவிந்தல்பூர் கிராமத்தில் வீட்டுசபை உருவாகவும், படுக்காகாவ் கிராமத்தில் சபைக்கான நிலம் கிடைக்கவும், ஜும்கி, முனிதா ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்கவும் ஜெபியுங்கள்.

மகய் II கோட்டம்

பிப்ரவரி 07 நபிநகர்

சராது, ரஜ்பரியா ஆகிய கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் கடந்து சென்றது. டன்டுவா, ரேக்னியா, நேவுடா, ராம்சாகர், ஹரிஹர்பூர், ஆசான் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. 152 சுவிசேஷக் கைப்பிரதிகள், 780 புதியஏற்பாடு, 10 முழு வேதாகம் ஆகியவை விநியோகிக்கப்பட்டன. தனிநபர் ஊழியத்தின் வாயிலாக 65 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. நீண்ட நாள் ஜெபத்திற்கு பின் மம்தாகுமாரிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைத்ததற்காகத் துதியுங்கள். இப்பணித்தள காப்பகத்திலுள்ள பிள்ளைகள் கர்த்தருடைய வசனத்தில் வளரவும், பிரமோத், அனிதா ஆகியோர் சபைக்கு வருவதற்கு தடை விதிக்கின்ற அவர்கள் குடும்பத்தாரின் உள்ளத்தில் தேவன் கிரியை செய்யவும், இப்பணித்தள சபை வளர்ச்சிக்காகவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 08 அதாரி

மலாஹி கிராமத்தில் சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகித்து சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. கெந்தோபூர், மாஃபா, டிகுரி, பன்வாசிநகர், யோகிபீஹா ஆகிய கிராமங்களில் அறிவிக்கப்பட்ட சுவிசேஷத்தினிமித்தம் சுமார் 100 பேருக்கு மேற்பட்டோர் கிறிஸ்துவின் அன்பை அறிந்துகொண்டனர். தொடர் ஊழியத்தின் வாயிலாக 5 பேர் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வந்துள்ளனர். பொய் வழக்கினால் சிறையிலிருந்த கிருஷ்னாஷா தேவனுடைய இரக்கத்தினால் விடுதலையானார் துதியுங்கள். சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட புதிய கிராமங்களில் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவும், காணாமல்போன பப்புகுமார் திரும்பக் கிடைக்கவும், மிதிலேஷ் மாங்சி குடும்பத்தில் சத்துரு போராட்டம் மாறி சமாதானம் உண்டாகவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 09 — மகத் காலனி கயா

டிகுனாபார்ம், துர்பே, கிரி, புனாகலா, தன்சிர், சோகன்பீஹா, மியாபீஹா ஆகிய கிராமங்களில் செய்யப்பட்ட பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக அனேகருக்கு புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டது. விசுவாசிகளுடைய வீடுகளில் குடும்பக் கூடுகைகள் நடத்தப்பட்டன. மியாபீஹா கிராமத்தில் விசுவாசிகளின் உதவியுடன் சிறுபிள்ளைகள் மத்தியில் ஊழியம் செய்யப்பட்டது. இப்பணித்தளத்திலுள்ள காப்பக பிள்ளைகள் வசனத்தில் வளர்ந்து வருகிறார்கள். மருத்துவ சிகிச்சை பெற்றும் சுகம் கிடைக்காமல் வயிற்று வலியால் வேதனையோடு இருந்த அனிதா இயேசுவின் நாமத்தினால் சுகம் பெற்றமைக்காக துதியுங்கள். போலாதாஸ் சகோதரன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலைபெறவும், காப்பகத்திலுள்ள 10ம் வகுப்புப் படிக்கும் ஸ்ரீகாந்த்குமார், சந்தீப்குமார், ராகுல்குமார் ஆகியோர் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெறவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 10 — ர.ஃபிகஞ்ச்

பலிகாவ் என்ற கிராமத்தில் சுவிசேஷப் புத்தகங்கள் மற்றும் புதிய ஏற்பாடு விநியோகித்து நற்செய்தி அறிவிக்கப்பட்டது. பத்வா, பாலுகாவ், கைரா, டாசில், சந்தாபூர்பீஹா, மட்படரியா, அதல்பூர் ஆகிய 7 கிராமங்களில் தொடர் ஊழியத்தின் வாயிலாக ஐந்து பேர் விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளனர். 5 வருடமாக மிகவும் பெலவீனப்பட்டிருந்த லாக்கோதேவிக்காக தொடர்ந்து ஜெபித்தபோது தேவன் சுகத்தைக் கட்டளையிட்டதற்காகவும், கர்த்தருடைய கிருபையால் தொடர் ஜெபத்தின் வாயிலாக ரித்தேஷ்குமார் வலிப்புநோயிலிருந்து சுகமானதற்காகவும் துதியுங்கள். நற்செய்தி கேட்டவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் அன்பை புரிந்துகொள்ளவும், எதிர்ப்புகள் மூலம் ஊழியத்திற்கு தடை ஏற்படாதபடி தேவன் பாதுகாக்கவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 11 — தெகாரி

நம்நகர், மல்பாத், கராரி, நிசுர்பூர், ராணிகஞ்ச், கோச், ஜமுவாரி, தானாபூர், டெக்காரி, அகியாபூர், தெத்தார்பூர், பாலி ஆகிய 12 கிராமங்களில் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டியவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. அக்கரியா என்ற கிராமத்தில் 20 புதியஏற்பாடு, 50 சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகித்து முதன்முதலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஆறு பேர் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். அகுத்ஷாவின் குடும்பம் பொய் வழக்கிலிருந்து ஜெபத்தினால் விடுதலை பெற்றதற்காகவும், ராம்ஜியின் சிறிய மகனை மின்சாரம் தாக்கியபோதும் தேவன் ஜீவனைக் காத்ததற்காகவும்

துதியுங்கள். குடிப்பழக்கத்திற்கும், சீட்டு விளையாடுவது போன்ற தீய பழக்கத்திற்கும் அடிமையாக இருக்கும் சகோதரர்கள் விடுதலை பெற்று இரட்சிக்கப்படவும், மின்த்தாதேவி, மீனாதேவி ஆகியோரின் கர்ப்பத்தை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 12 அகௌனா

புராஜெக்டர் உதவியுடன் பக்ரிபரவா, அக்பர்பூர் பகுதிகளிலுள்ள 12 இடங்களில் செய்யப்பட்ட திரைக்காட்சி ஊழியத்தின் வாயிலாக சுமார் 3500 பேருக்கு சுவிசேஷம் தடையின்றி அறிவிக்கப்பட்டது. பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக சந்திக்கப்பட்டவர்களில் 4 பேர் இரட்சிக்கப்பட்டு சபைக்கு வருகின்றனர். ஞாயிறுப்பள்ளி சிறுவர்கள் வசனத்தில் வளர்ந்து வருகிறமைக்காகவும், விசுவாசிகளுடைய வீடுகளில் ஜெபம் தடையின்றி ஆசீர்வாதமாக நடைபெற்று வருகிறதற்காகவும் துதியுங்கள். டோபி மற்றும் பகாட்பூர் பணித்தளங்களில் சொந்தமாக ஆலயம் கட்டப்படவும், கிராமங்களில் காணப்படும் மூடப்பழக்க வழக்கங்கள் மாறவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 13 கோடர்மா

சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட புத்தோ, லக்கிபீஹா, அசநாபாத், காலிமன்டா, கர்மா ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. கர்மா கிராமத்தில் படக்காட்சி ஊழியத்தின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு சுவிசேஷக் கைப்பிரதிகள், நற்செய்தி புத்தகங்கள் மற்றும் புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டன. சகோதரி நிக்கியின் மகன் பக்கவாத நோயிலிருந்து சுகம்பெற்று வருகிறதற்காகவும், குழந்தை பாக்கியமின்றி இருந்த மீனாவின் கர்ப்பத்தை தேவன் ஆசீர்வதித்தமைக்காகவும் துதியுங்கள். ஒரு வருடமாக நடக்க முடியாமல் உள்ள சுராஜ் என்பவர் எழும்பி நடக்கவும், தீபக் இயேசுவை ஏற்றுக்கொண்டதினிமித்தம் அவரை பகைக்கிற குடும்பத்தார் மனம்மாறவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 14 நவதா

பட்கிபீஹா, தீரஜ்பீஹா கிராமங்களில் முதன் முறையாக சுவிசேஷக் கைப்பிரதிகள் வாயிலாக 150 பேர் கிறிஸ்துவை அறிந்தனர். சோபாட்பட்டி, பகத்பட்டி, சம்ரியா ஆகிய கிராமங்களில் படக்காட்சி ஊழியத்தின் வாயிலாக 150 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டன. மூன்று நாட்கள் பெண்கள் ஏரியா கன்வென்ஷன் கூடுகை நடைபெற்றது 248 பெண்கள் உற்சாகமுடன் பல்வேறு பணித்தளங்களிலிருந்து வந்து கலந்துகொண்டனர்.

நான்கு இடங்களில் செய்யப்பட்ட பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக ஐந்து பேர் புதிதாக விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளதற்காகத் துதியுங்கள். நவதா பகுதியில் சபைக்குத் தேவையான நிலம் கிடைக்கவும், பணித்தளங்களில் ஊழியத்திற்கு விரோதமாய் எழும்பும் மக்களை தேவன் சந்திக்கவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 15 **பெலாகஞ்ச்**

பெலாஹடி கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதின் வாயிலாக சுமார் 100 பேருக்கு மேற்பட்டோர் கிறிஸ்துவை அறிந்துகொண்டனர். முபாரக்பூர், அம்பேத்கர்நகர், எர்க்கி, ராம்பூர், பேலாகஞ்ச் ஆகிய இடங்களில் வீட்டு சந்திப்பு ஊழியத்தின் வாயிலாக விசுவாசிகளின் வீடுகளில் நடத்தப்பட்ட வீட்டுக்கூட்டம் வாயிலாக புதியவர்களும் இயேசுவை அறிந்தனர். மருத்துவமனைக்குச் சென்று நோயாளிகளின் சுகத்திற்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. வாராந்திர கூட்டங்கள் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருவதற்காகத் துதியுங்கள். இப்பணித்தளத்தில் படக்காட்சி ஊழியத்திற்கு தேவன் திறந்த வாசலைத் தரவும், ஆலயத்திற்கு தேவையான நிலம் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 16 **கோஹ்**

தெலாப், கோஹ், ராஜாபூர், நாகுபீஹா, கைரா, பராஹ் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக புதிதாக மூன்று ஆத்துமாக்களை தேவன் தந்துள்ளார். தனித்தாள் ஊழியத்தின் வாயிலாக 20 பேர் சந்திக்கப்பட்டனர். பராஹி கிராமத்தில் சுவிசேஷம் அறிவித்த போது மக்கள் எதிர்ப்பு தெரிவித்தபோதிலும் எதிர்ப்பின் மத்தியிலும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சாதன்யாதவ், ராஜ்குமாரி ஆகியோர் ஜெபத்தினால் சரீர பெலவீனத்திலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதியுங்கள். சுகம் பெற்றவர்கள் கர்த்தருடைய வசனத்தில் வளரவும், பராஹி கிராமத்தில் ஊழியத்திற்கு விரோதமாய் எழும்பும் மக்களை தேவன் சந்திக்கவும், சபைக்குத் தேவையான நிலம் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 17 **கர்குரா**

குஜாபி, தரம்பூர், சோர்ஹா, பெராகி, புரானிகோதாம், செர்கி, கோவாகோல் ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பஜ்ரங்கிபிரசாத், நீலம்தேவி, லலிதாதேவி, மனோகர் பிரசாத், பிரியாதேவி ஆகியோர் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். சம்பு பாஸ்வான் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்று விசுவாசத்தில் வளர்ந்து வருகிறதற்காகவும், துக்கன் பாஸ்வான் குடும்பமாய் ஆண்டவரை விசுவாசிக்கிறதற்காகவும் துதியுங்கள். குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளினால்

பிரிந்து வாழ்கிற அர்ஜுன் பாஸ்வான் மற்றும் அவருடைய மனைவி சேர்ந்து வாழவும், வாலிபப் பிள்ளைகளின் வாழ்வில் கர்த்தருடைய வசனம் கிரியை செய்யவும், புதிய வீடுகளில் ஜெபக்கூட்டம் தொடங்கப்படவும், இப்பணித்தள ஊழியரின் மனைவிக்கு உள்ள மூலவியாதி சுகமாகவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 18 **போக்ரி பராவன்**

தன்புரா, கர்சராய், டட்ரவுல், அரூரி ஆகிய கிராமங்களில் படக்காட்சி ஊழியத்தின் வாயிலாக பெரியவர்களும், சிறுவர்களும், பெண்களும் இயேசு கிறிஸ்துவின் அன்பை அறிந்துகொண்டனர். சுதன்பூர், தன்புரா, தத்ரல், தியோதா, கொனான்பூர், குல்னி, கர்சராய், அருரி ஆகிய இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. முதன் முறையாக தான்பூர், டொமன்பாக் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிப்பதற்கு தேவன் திறந்த வாசலை தந்தமைக்காகவும், அசுத்த ஆவியின் கிரியையினால் ஆட்கொள்ளப்பட்டிருந்த பிரதிமாகுமாரி இயேசுவின் நாமத்தினால் விடுதலை பெற்றமைக்காகவும் துதியுங்கள். குல்மதிகுமாரி, சந்தன்குமார் ஆகிய சிறுவர்கள் வலிப்புநோயிலிருந்து சுகமாகவும், லாலோதேவியின் கர்ப்பப்பை வீக்கம் குணமாகவும், பஜ்ரங்கி பக்கவாத நோயிலிருந்து சுகமாகவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 19 **பாரூன்**

யத்தன்பூர் கிராமத்தில் முதன் முறையாக அநேகர் சுவிசேஷத்தால் தொடப்பட்டனர். 680 சுவிசேஷக் கைப்பிரதிகள், 164 புதிய ஏற்பாடு, 8 முழு வேதாகமம் விநியோகிக்கப்பட்டன. நலத்திட்ட பிள்ளைகளுக்கு நடைபெறுகிற நற்செய்திக்குழு வாயிலாக பிள்ளைகள் கர்த்தருக்குள் வளர்ந்து வருகிறார்கள். அங்கீதாதேவி வயிற்றில் இருந்த கட்டி அறுவை சிகிச்சையின்றி கர்த்தர் அற்புதமாக சுகமாக்கினதற்காகவும், திருமணமாகி 10 வருடங்களுக்குப் பிறகு தாராதேவியின் கர்ப்பத்தை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காகவும் துதியுங்கள். லீலாவதி குடும்பத்தில் தேவசமாதானம் உண்டாகவும், வாலிப சகோதரன் அமித்குமார் போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 20 **பாகேபாஜார்**

தர்வன், நௌவாகாப், கும்மி, துவாரி, ஹல்தியா, பகேரா, லால்பீஹா ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதியஏற்பாடு வாயிலாக 300 பேருக்கு சுவிசேஷம் கடந்து சென்றது. திருமணமாகி 8 வருடங்களுக்குப் பிறகு ஜெபத்தினால் கியாந்திதேவியின் கர்ப்பம் ஆசீர்வதிக்கப்பட்டது. துதியுங்கள்! புதிதாக இருவர் கிறிஸ்துவின்

மந்தையில் இணைந்துள்ளனர். பிரவீனா என்ற சிறுபிள்ளைக்கு சிறுநீரகத்தில் உள்ள கல் வெளியேறவும், நடக்க முடியாமல் இருக்கிற பூனம்தேவியின் 2 பிள்ளைகளும் நடப்பதற்கான பெலனை தேவன் தரவும் ஜெபியுங்கள்.

மகய் I கோட்டம்

பிப்ரவரி 21 ஜகனாபாத்

இப்பணித்தளத்தில் இக்கோட்ட ஊழியர்கள் அனைவரும் இணைந்து மூன்று நாட்கள் சிறப்பு நற்செய்தி கூட்டம் நடத்தினார்கள். இக்கூட்டத்தில் வாயிலாக 1500க்கும் மேற்பட்டோர் நற்செய்தியை அறிந்துகொண்டனர். அம்பேத்கர்நகர், பட்ரியா, லர்சா ஆகிய கிராமங்களில் நற்செய்தி கேட்டவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. எதிர்ப்புகள் அதிகமாக காணப்படும் இப்பகுதியில் விரைவில் எழுப்புதல் உண்டாகவும். பிக்ரம் மற்றும் சிலாவ் ஆகிய கிராமங்களில் சபைக்கான நிலம் கிடைக்கவும், சபைகளில் வாலிபப் பிள்ளைகளின் கூட்டம் பெருகவும், சபை விசுவாசிகள் மத்தியில் ஊழியர்கள் எழும்பவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 22 மசௌரி

அகார்பூர், சைய்ஸ் கிராமங்களில் புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்டது. பக்கிரி, சக்கர்புரா, பார்னி, தவுலத்பூர், ரகுநாத்பூர் ஆகிய கிராமங்களில் தனித்தாள் ஊழியத்தின் வாயிலாக 20 பேர் இயேசுவின் அன்பை ருசித்தனர். ரீமாதேவி, விகாஷ்குமார், பப்புகுமார், பர்மிளா, விஜய்ஷா, பரிமனிதேவி இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றனர். பொய் வழக்கினால் சிறைத் தண்டனைப்பெற்ற ஊர்மிளா என்ற விசுவாசியின் மகன் தொடர் ஜெபத்தினால் விடுதலையானார் துதியுங்கள். திருமணமாகி குழந்தை பாக்கியம் இல்லாதிருக்கும் பபித்தா, லீலா, பூனம், ஜெஸ்வந்தி ஆகியோருக்காகவும். பீரித்திகுமாரி, பஸந்தி, ரேக்கா, பிரபா, மீராகுமாரி, மனித்தாதேவி, அஜய், சாலிகிராம் ஆகியோர் அசுத்த ஆவியின் கட்டிலிருந்து விடுபடவும், அருன்யாதவ் என்பவர் குடலிறக்க வியாதியிலிருந்து சுகமாகவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 23 ராஜ்கிர்

கத்தல்புரா, சலாயிபீஹா ஆகிய கிராமங்களில் புதிதாக நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலை தந்தார். இதன்வாயிலாக சுமார் 225 பேருக்கு நற்செய்தி கடந்து சென்றது. ராஜ்கீர், டோஹி, பிர்சந்த், பல்வாயர், லோதிப்பூர்,

தயாராம்நகர், பட்ஹாரி ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்தை ஆர்வமுடன் கேட்டவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. அசுத்த ஆவியின் கிரியையினால் ஆட்கொள்ளப்பட்டிருந்த லலன் ரவிதாஸ் இயேசுவின் நாமத்தினால் விடுதலை பெற்றதற்காகத் துதியுங்கள். நற்செய்தி அறிவிக்கப்பட்ட இடங்களில் ஆத்துமாக்கள் ஆதாயப்படவும். மின்டுதேவிக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளவும், அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருக்கும் கௌசல்யாவுக்கு தேவன் விடுதலை கொடுக்கவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 24 — காகோ

காலீஷ்பூர், பத்சரா, சம்ஸ்பூர், பந்துசக், சனோரா, சாபேபூர் ஆகிய கிராமங்களில் செய்யப்பட்ட பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக மூன்று பேர் வசனத்தால் தொடப்பட்டு தொடர்ந்து சபை ஆராதனையில் கலந்துகொள்கிறார்கள். சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடுகள் விநியோகித்து 600க்கும் மேற்பட்ட நபர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. தினமும் தூக்கத்தில் கெட்ட சொப்பனங்களினால் பாதிக்கப்பட்டுவந்த ரீட்டாதேவிக்கு ஜெபித்த போது விடுதலை கிடைத்தது. தொடர் ஊழியத்தின் வாயிலாக சபைக்கு வருகிற புதிய நபர்களுக்காகத் துதியுங்கள். திருமணம் தடைபட்டுவரும் குடியாகுமாரிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்கவும், சுனைனாதேவி தைராய்டு பிரச்னையிலிருந்தும், மலாகிதேவி காசநோயிலிருந்தும், ராஜீவ்குமார் எலும்பு காசநோயிலிருந்தும், சந்தோஷ்குமார் வலிப்பு நோயிலிருந்தும் அற்புத சுகம் பெறவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 25 — பிஹட்டா

மகத்தம்பூர், பகஸ்திபூர், பைனால், மில்கிபர், அஹியாபூர் ஆகிய 5 கிராமங்களில் வீட்டு சந்திப்பு ஊழியத்தின் வாயிலாக விசுவாசிகளின் வீடுகளில் வீட்டுக் கூட்டம் நடைபெற்றது. பகவதிபூர் கிராமத்தில் இரவு ஜெபக்கூட்டம் நடத்தப்பட்டது. கடும் விஷமுள்ள தேள் கடியினால் பாதிக்கப்பட்டுள்ள மனோஜ்குமாரியின் ஜீவன் காக்கப்பட்டது. இப்பகுதியில் அரசியல் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோரின் மனமாற்றத்திற்காகவும், ஹரேந்தர் மற்றும் இவருடைய மனைவிக்கு மத்தியில் காணப்படும் குடும்பப்பிரச்னை மாறவும், இப்பணித்தளத்தில் சொந்தமாக ஆலயம் கட்டப்படவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 26 — கோசி

காமாபூர், பன்புகஞ்ச் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டது. தௌதால்பீஹா, பெலாயி, நவ்ஸ்ஹரா

சௌவுக், கோலக்பூர், மக்மத்பூர், காஜிசராய், டஹர்பூர் ஆகிய 7 கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சுமார் 200 பேருக்கு சுவிசேஷம் கடந்து சென்றது. சுனைனாதேவி மற்றும் சிவ்ஜியாதவ் ஆகியோர் விசுவாச வாழ்விற்குள் வந்ததற்காகவும், அஜித்குமார் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுபட்டமைக்காகவும் துதியுங்கள். இயேசுவை ஏற்றுக்கொண்டதினிமித்தம் குடும்பத்தினர் மற்றும் சமுதாயத்தினரால் துன்புறுத்தப்படுற விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும், விரோதிப்பவர்கள் மனந்திரும்பவும், நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ள இடங்களில் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

NET ஊழியங்கள்

(Neighbourhood Evangelism Thrust)

பிப்ரவரி 27 **நவாடா**

சாதர், அக்பர்பூர், முஸ்லீம் லாயின், ஷேக்காவத் பாக், அந்தி ஆகிய கிராமங்களில் முதல் முறையாக சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் கடந்து சென்றது. தனித்தாள் ஊழியத்தின் வாயிலாக 60 பேர் வசனத்தை வாஞ்சையுடன் கேட்டனர். இஸ்லாமிய மக்களின் எதிர்ப்புகள் மத்தியிலும் சுமார் 450 உருது புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டதற்காகவும், மொஹம்மத் ஜஹாங்கீர், இப்ராஹிம், ஃபைஜல், பாபர், அத்தர், ஆமீர், ஆக்தார் ஆலம், அப்பாஸ், சுஹேல், நவாப், ரஜாக் ஆகியோர் சபை ஆராதனையில் கலந்துகொள்கிறதற்காகவும் துதியுங்கள். வேதத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் வாழ்க்கையில், தேவன் கிரியை செய்யவும் ஜெபியுங்கள்.

பிப்ரவரி 28 **சிவான்**

ஆஷிநகர், சிஸ்வான்தலா, டேடி காட், ஜெ.பி.சௌவுக், காகஜீ மொஹல்லா, படி தகியா, நயா கிலா, ஆனந்த்நகர், சப்ரா ஆகிய இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டிய குடும்பங்களுக்கு "நேர்மையின் வழி" என்ற தலைப்பிலுள்ள ஹிந்தி படக்காட்சி ஊழியம் செய்யப்பட்டது. குலாம் பாபுத்தீன்க்கு பைக் விபத்து நடந்தபோதிலும் கர்த்தர் அவரை பாதுகாத்தமைக்காகவும், 7 பேர் புதிதாக இரட்சிக்கப்பட்டு தொடர்ந்து ஆராதனையில் கலந்துகொள்கிறதற்காகவும் துதியுங்கள். இஸ்லாமிய மக்கள் மத்தியில் அறிவிக்கப்பட்டுவரும் வசனம் அவர்கள் வாழ்வில் கிரியை செய்யவும், ஊழிய பகுதிகளில் எதிர்ப்புகள் மாறவும், அந்தகாரசக்திகளின் தாக்கங்கள் ஊழியப்பகுதிகளிலிருந்து நிர்மூலமாகவும் ஜெபியுங்கள்.

GEMS Action Centers

Chennai	No. 8, 3rd Jeevan Nagar, Adampakam, Chennai - 600088 Ph. 044-22670099
Coimbatore	No.2, Anbu Nagar, 4th Street, Vadavalli Road, Edayarpalayam, Coimbatore - 641025 Mobile : 9344824072
Dindugal	43/20C. Samiyar Thottam, Nagal Nagar, Dindugal - 624003 Cell : 9942824035
Erode	No. 34/20, Murugesan Nagar Main Road, Kumalankuttai, Erode - 638011 Cell: 9486976202
Kodaikanal	No. 1/199-1F, Packiapuram, Kodaikanal - 624101. Cell : 9443221776
Kovilpatti	No 11, Theppakulam street, Kovilpatti - 628501, Ph. : 04632-225890
Marthandam	N.S.Building, Kulasekaram Road, Marthandam, K.K. Dist., - 629165 Cell : 9788689771, 9486357950
Nazareth	No. 3, Dasan street, Nazareth - 628617, Ph. : 9442094110
Nagercoil	66-E, Bright street, Nagarcoil - 629001 Cell : 9894965520
Salem	1/40, Mugil Nagar 4th Cross, Indian Bank Colony, Narasothipatty, Salem - 636004 Cell: 9442337027
Sivakasi	3/1350/9, Sathur Road, Parraipatti, Sivakasi - 626189 Cell : 9843088840
Tuticorin	38, Sarangapani street, Tuticorin - 2, Cell : 9442210629
Tuticorin	39, Innaciyarpuram, 2 nd Street, Tuticorin - 628002 Cell : 9442166061
Vellore	Shalom Cottage, 52, Vana Nagar, Alamelumangapuram, Vellore - 632009 Cell : 9952545181

REGIONAL ACTION CENTERS

Chennai	Plot No. 19-A, 3rd street, Megala Nagar, Vengaivasal - 600073, Cell : 9444763141
Coimbatore	No. 7, Laxmi puram, 1st Cross, EB Colony, TVS Nagar, Coimbatore - 641025 Cell : 9442934613
Trichy	Mahanaim, 1, Abdul Gazoor street, Kajah Nagar - 620020 Cell : 9443555577
Tirunelveli	14/109A, 10th Street, Shanthi Nagar, Palayamkottai - 627002 Cell: 9443113322

General Action Center - TamilNadu

GEMS, No. 14, Jeba Nagar, Vasanthapuram South, Near Vijaya Garden, Tirunelveli - 627005
Email : nellaioffice@gemsbihar.org Mobile : 9488771655

Promotional Coordination Center - TamilNadu

No. 21, Sharon Church Street, Booman Nagar, Madurai-625018
Email : tnpromotions@gemsbihar.org Mobile : +919865583563

OTHER STATE ACTION CENTERS

Bangalore	No. B-9, Gogappa Layout, Near Railway Gate, K G Halli, A C Post, Bangalore - 560045 Tel: 9448517025
Navi Mumbai	Plot No 58, Nandanvan CHS, Lane - 3, Sector - 17, Nerul (East), Navi Mumbai - 400 706 Cell : 9322730294 9820701775
Pondicherry	No. 22, 2nd Floor, 2nd cross, Perumal Raja Garden, Reddiyar Palayam, (opp. SBI Bank), Pondicherry - 605010 Cell : 8521577762
Kerala	No. 4, N.V. Nagar, Peroorkada (P.O), Trivendram, Kerala - 682005 Mobile : 9486357950

GEMS National Action Center

No: 29, Church street 1st Cross, Near Simpolo Tiles shop,
Kalkere Main Road, Horamavu, Bangalore -560043
Tel: +91 9443429735 E-Mail : promotions@gemsbihar.org

ஜெம்ஸ் வாகனத்துறை பணியாளர்கள் கூடுகை

ஜெம்ஸ் வாகனத்துறை பணியாளர்களுக்கான ஐக்கியக் கூடுகை ஜனவரி 15 அன்று பவுலியா பணித்தளத்தில் நடைபெற்றது. 82 பணியாளர்கள் இக்கூடுகையில் பங்கேற்றனர். உற்சாகமூட்டும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டதுடன், ஜெம்ஸ் ஊழியர் சகோ. சுனில் தனது அனுபவ சாட்சியுடன் பகிர்ந்துகொண்ட செய்தி அனைவரையும் தொட்டது.

GEMS MEDIA

Regd. office :

GEMS Educational Media Services

11,13[th] Cross Street, New Colony,
Chrompet, Chennai - 44
Ph : 044-22386031, 044-22380295

Field. office :

GEMS, Sikaria, Indrapuri - 821 308
Rohtas Dist., Bihar. Ph. : 06184 234567

(Railway station & couriers centre : Dehri-on-Sone)
Website : www.gemsbihar.org.
E-mail : gems@gemsbihar.org

if undelivered please return to

GEMS Action Center

14, Jeba Nagar,
Vasanthapuram South,
Near Vijaya Garden,
Tirunelveli - 627 005. Ph : 9488771655
E-Mail : nellaioffice@gemsbihar.org

To

....

....

....

....

Private circulation

தனிப்பிரதி ரூ10-
ஆண்டு சந்தா ரூ100-